**(ஆவணி 12) 2024 ஆகஸ்ட் 28-ம் தேதி புதன்கிழமைகாலை 11.00 மணிக்கு**

**திருவாரூர் நகர் மன்ற சாதாரணக் கூட்டம் நடைபெறும் அச்சமயம்**

**கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்**

**முன்னிலை: திருமதி.செ.புவனப்பிரியா செந்தில், நகரமன்ற தலைவர்**

| பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம் | தீர்மான எண் |
|---|---|
| பொருள் எண் : 1<br>நகரமன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>தமிழ்நாட்டில் சிறந்த நகராட்சியாக திருவாரூர் நகராட்சியை தேர்வு செய்து ஆகஸ்ட் 2024 சுதந்திர தின விழாவில் முதல் பரிசு வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் அதனை பெற்றிட திருவாரூர் நகராட்சிக்கு பல்வேறு திட்டப்பணிகள் வழங்கிய மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களுக்கும் அதனை பெற்றிட உறுதுணையாக இருந்த திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் நகர்மன்ற தலைவர், துணை தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரின் சார்பாக நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. | 607) அலுவலக குறிப்பு:<br>தீர்மானிக்கப்பட்டது. |
| பொருள் எண் : 2<br>நகரமன்ற துணை தலைவர் திருமதி.ச.அகிலாசந்திரசேகர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>எனது வார்டுக்கு உட்பட்ட மண்சாலைகளை தார் சாலைகளாக அல்லது பேவர் பிளாக் சாலைகளாக மாற்றி தர வேண்டும். வாசன் நகர் , பனையடி அய்யனார் கோவில் சந்து, ஐயனார் கோயில் உபசந்து ஆகிய விடுபட்ட பகுதிகளில் பாதாளச்சாக்கடை (UGD) இணைப்பு வழங்கிட வேண்டுதல். மழைநீர் வடிகால் முழுவதையும் பருவமழை காலத்திற்குள் அவசரம் அவசியம் கருதி சுத்தம் செய்து தர வேண்டுதல். மின் விளக்குகள் காலாவதி ஆகிவிட்டதால் வெளிச்சம் குறைவாக உள்ளதால் புதியதாக மின்விளக்குகள் அமைத்து தர வேண்டுதல். | 608) அலுவலக குறிப்பு:<br>தீர்மானிக்கப்பட்டது. |
| பொருள் எண் : 3<br>4 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ஐ.பெனாசிர் ஜாஸ்மின் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>நான்காவது வார்டுக்கு உட்பட்ட அப்துல் கலாம் நகர் செல்லும் வழியில் மின் விளக்கு இன்றி இருளாக உள்ளது.அது விஸ்வாமித்திரர்புரம் என்ற ஒரு கிராமத்திற்கு செல்லும் முக்கியமான பாதையாக இருப்பதால் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அந்த வழியில் நூற்றுக்கணக்கான நபர்கள் தினமும் செல்வதால் பொது மக்களின் நலன் கருதி உடனடியாக அங்கு மின்கம்பம் அமைத்து மின்விளக்கு அமைத்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.மேலும் வடக்கு தெரு மற்றும் ஜெயம் தெருவில் குறிப்பிட்ட இடத்தில் மிகவும் இருளாக உள்ளது. விச ஜந்துக்களின் நடமாட்டமும் அதிகமாக உள்ளது.எனவே வடக்கு தெரு மற்றும் ஜெயம் தெருவில் இரண்டு மின் கம்பங்கள் அமைத்து மின் விளக்குகளும் அமைத்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.மொத்தம் 3 மின் கம்பங்கள் அவசர அவசியம் கருதி உடனடியாக அமைத்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன். | 609) அலுவலக குறிப்பு:<br>தீர்மானிக்கப்பட்டது. |
| பொருள் எண் : 4<br>5 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.பா.ஷகிலா பானு அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>கேக்கரை பிடாரி கோவில் தெருவில் குடிநீர் குழாய் அமைத்து தர வேண்டும். எனது வார்டு முழுவதும் ஒரு சில இடங்களில் இருளாக இருப்பதால் 20 மின் விளக்குகள் அமைத்து தர வேண்டும். சூஃபி நகர் தெற்கு தெரு. ரஹ்மானியாதெரு. கேக்கரை பெருமாள் கோயில் தெரு ஆகிய பகுதிகளுக்கு கல்வெட்டு அமைத்து தர வேண்டும். கேக்கரை சிவன் கோவில் தெருவில் கருமாதி மண்டபம் அமைத்து தர வேண்டும். 52 பணப்பகுதி நகரில் சிறுவர் பூங்கா அமைத்து தர வேண்டும். | 610) அலுவலக குறிப்பு:<br>தீர்மானிக்கப்பட்டது. |
| பொருள் எண் : 5<br>6 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.பா.ஐஸ்வர்யா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>எனது ஆறாவது வார்டில் உள்ள மண் சாலைகளை தார் சாலையாக மாற்றி தர கேட்டுக்கொள்கிறேன்.எனது வார்டில் விடுபட்ட இடங்களில் பாதாள சாக்கடை அமைத்து தர கேட்டுக்கொள்கிறேன். ராமகே ரோடு நகராட்சி தொடக்கப்பள்ளியில் மாணவர்கள் அமர்வதற்கு பெஞ்ச் டெஸ்க் வசதி செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன். ராமகே நகராட்சி தொடக்கப் பள்ளியில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன். ராமகே கேட்டு தெருவில் மினி பவர் பம்பு அமைத்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன். ராமகே கேட்டு தெருவில் ரீடேனிங் வால் அமைத்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன். காயிதே மில்லத் தெருவில் மழை நீர் வடிகால் தொட்டி அமைத்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன். ராமகே ரோடு விஜபி நகரில் பூங்கா அமைத்து தர கேட்டுக் கொள்கிறேன். | 611) அலுவலக குறிப்பு:<br>தீர்மானிக்கப்பட்டது. |
| பொருள் எண் : 6<br>8 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ப.அன்பழகன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>அம்மாத்தோப்பு வாயிலில் உயர் கோபுரம் மின் விளக்கு மற்றும் படித்துரை அமைத்தல். நரசப்பத்தோப்பில் பாதாளச்சாக்கடை வசதி ஏற்படுத்த கோருதல். துர்க்காலயா ரோட்டில் சிறு தெருக்களில் சாலை மற்றும் தெருவிளக்கு அமைத்தல். வ.ஊ.சி நகரில் பூங்கா வசதி செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.எனது வார்டில் சிசிடிவி கேமரா அமைத்து தர வேண்டுதல் | 612) அலுவலக குறிப்பு:<br>தீர்மானிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| பொருள் எண் : 7<br><u>13 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.சி.உமாமகேஸ்வரி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்</u><br>மானந்தியார் தெருவில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை குளியலறை புதிய போர் வசதியுடன் விரிவுபடுத்தி பயன்பாட்டிற்கு தர வேண்டும். வார்டு முழுவதும் உள்ள சேதமடைந்த மழைநீர் வடிகால்களை சரி செய்து தர வேண்டும். VST தெரு GRT வீடு அருகில் மூன்று சாலை சந்திப்பிலும் VST தெரு தெற்கு வீதி இணைப்பு சாலை முடிவிலும் குமரக்கோவில் தெரு கீழவடம்போக்கி தெரு இணைப்பு சாலையிலும் வேகத்தடை அமைத்துதர வேண்டும். நமக்கு நாமே திட்டத்தின் கீழ் வார்டில் முக்கியமான சில இடங்களில் கேமரா பொருத்தி தர வேண்டும். தெற்கு வீதி கீழ வீதி இணைப்பு சாலையிலும் மானந்தியார் தெரு வருவாய் கோட்டாச்சியர் அலுவலகம் அருகிலும் புதிய கல்வெட்டு அமைத்து தர வேண்டும். | 613) அலுவலக குறிப்பு:<br>தீர்மானிக்கப்பட்டது. |
| பொருள் எண் : 8<br><u>15 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.சி.மூர்த்தி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்</u><br>சாம்பசிவம் நகரில் தெருவிளக்கு இல்லை. புதிய தெருவிளக்கு இணைப்பு ஒன்று ஏற்பாடு செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். வன்மீகப்புறத்திலுள்ள பொது கழிப்பறை சரிசெய்து தருமாறு கேட்டுக்கொள்கிறோம். ரயில்வே காலனி கீழ்புறம் பகுதியில் சாலை வசதி செய்துதர வேண்டுகிறோம். ரயில்வே காலை ரேசன் கடை மற்றும் பாலத்திற்கு இடைப்பட்ட பகுதியில் உள்ள இணைப்பு சாலை செப்பனிட வேண்டுகிறோம். ரயில்வே காம்பவுண்ட், ரயில்வே காலனி கீழ்புறம் புகையிலைத் தோட்டம், ஜகஜீவன் ராமன் தெரு ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் வசதி செய்துதர வேண்டுகிறோம். | 614) அலுவலக குறிப்பு:<br>தீர்மானிக்கப்பட்டது. |
| பொருள் எண் : 9<br><u>17 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.சி.சசிகலா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்</u><br>முடுக்கு தெரு மக்களின் நீண்ட நாள் கனவான முடுக்கு தெரு சந்திர்க்கு பொது நிதியில் பேவர் பிளாக் சாலை அமைத்து தர தீர்மானம் நிறைவேற்றி தர வேண்டும். | 615) அலுவலக குறிப்பு:<br>தீர்மானிக்கப்பட்டது. |
| பொருள் எண் : 10<br><u>20 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.வே.கமலாம்பாள் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்</u><br>எனது வார்டு 20 சீராத்தோப்பில் கழிவறை இல்லாமல் மக்கள் சிரமத்திற்கு உள்ளனர். இரவு நேரங்களில் பெண்கள் குழந்தைகள் சிரமப்படுகிறார்கள். ஆகையால் புதிதாக கழிவறை கட்டிதருமாறு கேட்டுக்கொள்கிறேன்.அழகிரி நகரில் மழைநீர் வடிகாலை தூர்வாரிட கேட்டுக்கொள்கிறேன்.எனது வார்டில் தெருவிளக்குகள் சரிசெய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.பாதாளச்சாக்கடை திட்டத்தினை விரைவாக முடித்திட கேட்டுக்கொள்கிறேன்.சாலை வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். | 616) அலுவலக குறிப்பு:<br>தீர்மானிக்கப்பட்டது. |
| பொருள் எண் : 11<br><u>23 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ச.கருணாநிதி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்</u><br>எனது வார்டு பகுதியில் மண் சாலையாக உள்ள தாமரை குள தெரு, ஆலடி மாரியம்மன் கோவில் குறுக்கு தெரு, கொய்யா தோப்பு தெரு ஆகிய தெருக்களில் தார் சாலையாக அமைத்து தர வேண்டும். கட்டளை தோப்பு பகுதியில் குடிநீர் குழாய் பதிக்கப்படாமல் உள்ளது. அந்த பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்கிறேன். கலைஞர் தெருவில் புதிய மின் கம்பங்கள் அமைத்து தெருவிளக்குகள் பொருத்தி தர வேண்டும். வார்டு முழுவதும் தெருவிளக்குகள் இல்லாத மற்றும் தெருவிளக்கு பழுதான இடங்களில் புதிதாக தெருவிளக்குகள் பொருத்தி தர வேண்டும். குடிநீர் குழாய் பதிக்கப்பட்ட தெருக்களில் உடனடியாக தார் சாலை அமைத்து தர வேண்டும். ஆலடி மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள சிறு பாலத்தில் அருகே மண் அரிப்பு ஏற்ப்பட்டு பாலம் சேதமடையும் நிலையில் உள்ளது. ஆகவே பாலத்தை ஒட்டி கான்க்ரீட் சுவர் அமைத்து தர வேண்டும். செங்கமேட்டு தெருவில் உள்ள சிறுபாலம் மிகவும் சேதமடைந்து எப்போது வேண்டுமானாலும் இடிந்து விழும் நிலையில் உள்ளது. எனவே, பழைய பாலத்தை இடித்துவிட்டு புதிய சிறு பாலம் அமைத்து தர வேண்டும். | 617) அலுவலக குறிப்பு:<br>தீர்மானிக்கப்பட்டது. |
| பொருள் எண் : 12<br><u>26 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.க.பாரதி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்</u><br>பெரியமில் தெருவிலுள்ள குளம் நான்கு பக்கமும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு குளம் குட்டையாக மாறிவிட்டது. குளம் முழுமையாக ஆக்ரமிப்பு செய்வதற்கு முன் நான்கு பக்கமும் கரைகள் அமைத்து தூர்வாரி தர வேண்டுகிறேன். பெரியமில்தெரு பாப்பிளாட்டிலுள்ள சிறு சாலைகள் 15 வருடங்களாகவே மண் சாலைகளாகவே இருக்கின்றது. மழைக்காலத்திற்கு முன் பேவர் பிளாக் சாலை அமைக்க வேண்டுகிறேன். ஆறுமுகம் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்து சாலை ஓரம் மழைநீர் வடிகால் அமைத்துதர வேண்டுகிறேன். பெரியமில் தெருவில் பாதுகாப்பு கருதி கண்காணிப்பு கேமராக்கள் அமைத்து தர வேண்டுகிறேன். அனைத்து மழைநீர் வடிகால்களும் சேதமடைந்தும் மண் அடைந்தும் கிடைக்கின்றது. அதனை புதிதாக அமைத்து சுத்தம் செய்து மழைநீர் வடிவதற்கு வழிவகை செய்ய வேண்டுகிறேன். | 618) அலுவலக குறிப்பு:<br>தீர்மானிக்கப்பட்டது. |
| பொருள் எண் : 13<br><u>28 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.தி.கோமதி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்</u><br>எனது 28 வார்டில் உள்ள பாரதிதெரு, இடும்பன் நகர், குமரன் தெரு, கந்தன் தெரு, கணேசா நகர், கலைவானர் அரங்கு (ஆர்ச்), நார்சிங்கம் பேட்டை, மன்மதன் கோவில் தெரு, வாளவாய்க்கால் ஆகிய சாலைகள் மிகவும் மோசமாக உள்ளது சாலை வசதி செய்திட கேட்டுக்கொள்கிறேன். பாரதிதெருவில் பாலம் பழுதடைந்து எந்த நேரமும் விழுந்து விடும் நிலையல் உள்ளது. ஆகவே அந்த சிறிய பாலம் போட்டு தருமாறு கேட்டுகொள்கிறேன். பைபாஸ் சாலையில் வாளவாய்க்கால் ரவுண்டாணாவிலிருந்து சிவகுமார் கிளினிக் வரை பைபாஸ் சாலையில் மின் விளக்குகள் சரிசெய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். பைபாஸ் நார்சிங்கம்பேட்டையில் சுமார் 60 குடும்பங்கள் உள்ளன அதற்கு குடிநீர் SINTEX TANK சிறுமின்விசை பம்பு வைத்து மோட்டார் வைத்து தருமாறு கேட்டுகொள்கிறேன். இடும்பன் நகரில் ஆத்தாக்குளம் KTR எஸ்டேட் பகுதியில் மழைநீர் வடிகால் தூர்வாரிட கேட்டுக்கொள்கிறேன். வாளவாய்க்கால் ரவுண்டாணா அருகே உள்ள குளத்தினை தூர்வாரி ஆக்கிரமிப்புகளை அகற்றி குளத்தினை மேம்படுத்திட கேட்டுக்கொள்கிறேன்.எனது வார்டு மதுரா நகரில் பூங்கா அமைத்திட கேட்டுக்கொள்கிறேன். | 619) அலுவலக குறிப்பு:<br>தீர்மானிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| பொருள் எண் : 14<br><u>29 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எஸ்.அன்வர் உசேன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்</u><br>பைபாஸ் சாலை மிகவும் மோசமாக உள்ளது சாலையை சீரமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் சிவன் கோயில் தெருவில் மினி பவர் பம்ப் ஒன்று அமைத்து தரவும் வருகிற மழை காலங்களுக்கு எனது வார்டில் உள்ள வாய்க்கால்களை தூர்வாரி தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் எனது வார்டில் உள்ள நியாய விலைக் கடையில் மேற்கூரை அமைத்து தர தருமாறு கேட்டுக்கொள்கிறேன் | 620) அலுவலக குறிப்பு:<br>தீர்மானிக்கப்பட்டது. |
| பொருள் எண் : 15<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யும் நீர்தேக்க நிலையங்களான சந்தைப்பேட்டை, மடப்புரம், தென்றல் நகர், கிடாரம்கொண்டான் மற்றும் ஐ.பி கோவிலில் இருந்து விநியோகிக்கப்படும் குடிநீரில் குளோரின் கலந்து பொதுமக்களுக்கு வினியோகம் செய்திடவும் பொதுமக்களின் பாதுகாப்பு நலனை கருத்தில் கொண்டு நீர்த்த குளோரினை கொள்முதல் செய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.39.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்குண்டான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண். 846 /2022/இ1 | 621) அலுவலக குறிப்பு:<br>அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண் : 16<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 10 வரையில் உள்ள அனைத்து தெருக்களிலும் மற்றும் நகராட்சியின் நான்கு எல்லையிலும் பெயர் பலகை வைக்க வேண்டியது அவசியம் என்பதால் பெயர் பலகை அமைத்திட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண். 2167/2022/இ1 | 622) அலுவலக குறிப்பு:<br>அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண் : 17<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 முதல் 20 வரையில் உள்ள அனைத்து தெருக்களிலும் பெயர் பலகை வைக்க வேண்டியது அவசியம் என்பதால் பெயர் பலகை அமைத்திட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண். 2167/2022/இ1 | 623) அலுவலக குறிப்பு:<br>அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண் : 18<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 முதல் 30 வரையில் உள்ள அனைத்து தெருக்களிலும் பெயர் பலகை வைக்க வேண்டியது அவசியம் என்பதால் பெயர் பலகை அமைத்திட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண். 2167/2022/இ1 | 624) அலுவலக குறிப்பு:<br>அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண் : 19<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28 பாரதி தெருவில் மழைக்காலங்களில் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்ல சிரமமாக உள்ளதாக பொதுமக்களிடமிருந்து புகார் வரப்பட்டதை தொடர்ந்து நகர்மன்றத் தலைவர், நகராட்சி ஆணையர் நகராட்சி பொறியாளர் மற்றும் பொதுப்பணி மேற்பார்வையாளர் ஆகியோர் மேற்படி இடத்தினை நேரில் ஆய்வு செய்ததில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு சிறுபாலம் அவசியமானதாகவும் உள்ளது. எனவே மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.2167/2022/இ1 | 625) அலுவலக குறிப்பு:<br>அனுமதிக்கப்பட்டது |

பொருள் எண் : 20

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 மடப்புரம் பகுதியில் மழைக்காலங்களில் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்ல சிரமமாக உள்ளதாக பொதுமக்களிடமிருந்து புகார் வரப்பட்டதை தொடர்ந்து நகர்மன்றத் தலைவர், நகராட்சி ஆணையர் நகராட்சி பொறியாளர் மற்றும் பொதுப்பணி மேற்பார்வையாளர் ஆகியோர் மேற்படி இடத்தினை நேரில் ஆய்வு செய்ததில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு சிறுபாலம் அவசியமானதாகவும் உள்ளது. எனவே மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.2167/2022/இ1

626) அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் : 21

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 முடுக்குத் தெருவில் சிறுபாலத்துடன் கூடிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.12.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 2167/2022/இ1

627) அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் : 22

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 ராமகே தெருவில் கழிவறை அமைக்கும் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.12.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 2167/2022/இ1

628) அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் : 23

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023–24ன் கீழ் பழைய தஞ்சை சாலையில் உள்ள மார்க்கெட்டினை நவீனமயமாக்கும் பணி நடைபெற்று வருவதால் மாற்று இடத்தில் தகரத்தால் ஆன தற்காலிகமாக கருவாட்டு சந்தை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.2167/2022/இ1

629) அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் : 24

திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4ல் உள்ள புதுமனைக்குளம் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022–23ன் கீழ் ரூ.33.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி குளத்தில் Inlet மற்றும் Bathing ghat ஏற்படுத்துதல் மற்றும் இதர கூடுதல் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.2167/2022/இ1

630) அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் : 25

கல்வி நிதி 2024–25ன் கீழ் இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள கீழ்கண்ட பள்ளிகளுக்கு மாணவ மாணவிகளின் கற்றல் திறனை மேம்படுத்தும் வகையில் ஸ்மார்ட் கிளாஸ் LED பேனல், மற்றும் இதர பணிகளை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள கீழ்கண்ட விவரப்படி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கும் பணிகளை ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட விஜயபுரம் பள்ளி, கௌரிசாமி பள்ளி, ராமகே பள்ளி, கொடிக்கால்பாளையம் பள்ளி,பாவாகோபால்சாமி பள்ளி , கே.டி.ஆர் பள்ளிகளி ் உளள மாணவ மாணவிகளுக்கு கிண்டர் கார்டன் பர்னிச்சர் மற்றும் நான்கு பேர் அமரக்கூடிய வகையிலான மேசை நாற்காலிகள் பொருத்தும் பணி | 9.00 |
| 2. | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட மடப்புரம் சபாபதி நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் உள்ள மாணவ மாணவிகளின் கற்றல் திறனை மேம்படுத்தம் வ ையில் ஸ்மார்ட் கிளாஸ் மற்றும் பெயிண்டிங் , பர்னிச்சர் | 9.95 |

631) அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | பொருத்தும் பணி | |
| 3. | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட ராமகே நகராட்சி பள்ளியில் உள்ள மாணவ மாணவிகளின் கற்றல் திறனை மேம்படுத்தும் வகையில் ஸ்மார்ட் கிளாஸ் மற்றும் பெயிண்டிங் , பர்னிச்சர் பொருத்தும் பணி | 9.95 |
| 4. | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட கொடிக்கால்பாளையம் நகராட்சி பள்ளியில் உள்ள மாணவ மாணவிகளின் கற்றல் திறனை மேம்படுத்தும் வகையில் ஸ்மார்ட் கிளாஸ் மற்றும் பெயிண்டிங் , பர்னிச்சர் பொருத்தும் பணி | 9.95 |

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்காணும் பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தை நகராட்சியின் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 1677/2023/இ1

---

பொருள் எண் : 26

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் ஒரு பகுதியில் திருவாரூர் நகராட்சியின் வரி வசூல் மையம் அமைத்திடவும் சந்தைப்பேட்டை பகுதியில் உள்ள TWAD கட்டிடம் மற்றும் மண்டல சுகாதார அலுவலகத்தில் Partition பணி மேற்கொள்ளவும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.2167/2022/இ1

632) அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது

---

பொருள் எண் : 27

திருவாரூர் நகராட்சி தியாகபெருமாநல்லூர் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண் 29 ஐ திரு.V.ராஜேந்திரன், எண் 27A/1, காகிதகாரத்தெரு, திருவாரூர் என்பவரால் பொது ஏலம் எடுத்து நடத்தி வந்த கடைக்கான வாடகை தொகை முழுவதும் செலுத்தி 31.03.2024 முதல் ஒப்படைப்பு செய்திட 31.03.2024 அன்று கடிதம் கொடுத்துள்ளார். மேற்படி கடையினை நகராட்சி வசம் எடுத்து மறு ஒப்பந்தபுள்ளிகள் கோரிட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தியாகபெருமாநல்லூர் புதிய பேருந்து நிலையம் கடை எண் 29 ஐ மறு ஒப்பந்தபுள்ளிகள் கோரிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்**2506/2017/**அ**5

633) அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது

---

பொருள் எண் : 28

திருவாரூர் நகராட்சி தியாகபெருமாநல்லூர் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண் 19 மற்றும் 20 ஐ திரு.N.ராமு, எண் 27F, திருமஞ்சனவீதி, திருவாரூர் என்பவரால் பொது ஏலம் எடுத்து நடத்தி வந்த கடைகள் மூலம் போதிய வருமானம் இல்லாத்தாலும், கடை வாடகை அதிகமாக உள்ளதாலும், வாடைகை தொகை முழுவதும் செலுத்தி 31.03.2024 முதல் ஒப்படைப்பு செய்திட 31.03.2024 அன்று கடிதம் கொடுத்துள்ளார். மேற்படி கடைகளை நகராட்சி வசம் எடுத்து மறு ஒப்பந்தபுள்ளிகள் கோரிட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தியாகபெருமாநல்லூர் புதிய பேருந்து நிலையம் கடை எண் 19 மற்றும் 20 ஐ மறு ஒப்பந்தபுள்ளிகள் கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்**2506/2017/**அ**5

634) அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது

---

பொருள் எண் : 29

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ஆய்வுகூட்ட அறிவுரைகளின் படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண் 844/2023/அ2 நாள் 11.06.2024ல் திருவாரூர் நகராட்சியில் 2024–2025 ஆம் ஆண்டிற்கான அனைத்து வரி இனங்களிலும் 100% வசூல் செய்திடவும், 30.09.2024 க்குள் 50% வசூல் செய்திடவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதன்படி வசூல் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளதன் படி வசூல் பணிகள் பார்க்கப்பட்டு வருகிறது. மேலும், இலக்கினை அடைந்திட சொத்து வரி,காலிமனை வரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம் மற்றும் பாதாளசாக்கடை இணைப்புக் கட்டணம் ஆகியவற்றை உடனடியாக செலுத்தகோரி 1 முதல் 30 வரை உள்ள வார்டுகளில் தினசரி ஆட்டோ மூலம் விளம்பரம், விளம்பரபதாதகைகள் மற்றும் தினசரி நாளிதழில் மூலம் விளம்பரங்கள் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலககுறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட விளம்பரங்களுக்கு உத்தேச செலவினம் ரூ.200000/– ற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. இச்செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்லாம்.

**ந.க.எண்** 1137/2024/**அ**1

635) அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது

---

பொருள் எண் : 30

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதகளில் வார்டு எண் 01 முதல் 30 வரையிலான சொத்துவரி வரி விதிப்புகளுக்கு புதிய சொத்துவரி விதிப்புகள் விதிக்கப்பட்டு பழைய சொத்து வரிவிதிப்புகள் பல ஆண்டுகளாக நீக்கம் செய்யலாமல் நிலுவையாக உள்ளளதால், கீழ்கண்ட வரிவிதிப்புகள் இந்நகராட்சி வருவாய் ஆய்வர்கள் மற்றும் புறப்பணி அலுவலர்களால் நேராய்வு செய்யப்பட்டதன் அடிப்படையில் நிலுவை தொகை ரூ. 218235 /– நீக்கம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**நீக்கம் செய்ய வேண்டிய சொத்துவரி விதிப்புகள்**

636) அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது

| வ.எ | வரிவிதிப்பு எண் | வரிவிதிப்பாளர் | வா | ஆண்டு | கேட்பு | குறிப் |
|---|---|---|---|---|---|---|

| ண் | | பெயர் | . எ ண் | | நிலுவை | நடப்பு | மொத்தம் | பு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 104/016/900137 | பீ. முருகதாஸ் | 16 | 2021–2025 | 4752 | 1754 | 06 | இப்பட்டியலில் உள்ள வரி விதிப்புகளுக்கு புதிய வரி விதிப்பு விதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டுவருவதால் இவ் வரி விதிப்புகளை நீக்கம் செய்யலாம். | |
| 2 | 104/016/900138 | பீ. முருகதாஸ் | 16 | 2021–2025 | 4128 | 1752 | 5880 | | |
| 3 | 104/016/900139 | பீ. முருகதாஸ் | 16 | 2021–2025 | 4512 | 20 | 6516 | | |
| 4 | 104/016/900140 | பீ. முருகதாஸ் | 16 | 2020–2025 | 5256 | 1752 | 7008 | | |
| 5 | 104/016/900141 | பீ. முருகதாஸ் | 16 | 2020–2025 | 5256 | 1752 | 7008 | | |
| 6 | 104/016/900142 | பீ. முருகதாஸ் | 16 | 2020–2025 | 1874 | 688 | 2562 | | |
| 7 | 104/016/900143 | பீ. முருகதாஸ் | 16 | 2020–2025 | 1874 | 688 | 2562 | | |
| 8 | 10 016/900144 | பீ. முருகதாஸ் | 16 | 2020–2025 | 1874 | 688 | 2562 | | |
| 9 | 104/016/900145 | பீ. முருகதாஸ் | 16 | 2022–2025 | 1376 | 176 | 1552 | | |
| 10 | 104/016/900146 | பீ. முருகதாஸ் | 16 | 2019–2025 | 2678 | 640 | 3318 | | |
| 11 | 104/016/900277 | டிரஸ்ட்பெருமாள் கோவில் | 16 | 2012–2025 | 3898 | 282 | 4180 | | |
| 12 | 104/016 00117 | கலியமூர்த்தி | 16 | 2015–2025 | 10250 | 1656 | 11906 | | |
| 13 | 104/017/900245 | பீ. செல்வகணபதி | 17 | 2018–2025 | 5050 | 1308 | 6358 | | |
| 14 | 104/017/900246 | பீ. செல்வகணபதி | 17 | 2018–2025 | 5050 | 1308 | 6358 | | |
| 15 | 104/017/900247 | பீ. செல்வகணபதி | 17 | 2020–2025 | 3840 | 1248 | 5088 | | |
| 16 | 104/017/900 6 | பீ. செல்வகணபதி | 17 | 2023–2025 | 1290 | 1290 | 2580 | | |
| 17 | 104/017/900093 | பீ. செல்வகணபதி | 22 | 2018–2025 | 10298 | 2128 | 12426 | | |
| 18 | 104/021/900140 | கே.பார்த்தசாரதி | 21 | 2022–2024 | 4848 | 0 | 4848 | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 19 | 104/021/900141 | கே.பார்த்தசாரதி | 21 | 2022–2024 | 3040 | 0 | 3040 | | |
| 20 | 104/021/90 59 | ஜி.குமார் | 21 | 2017–2025 | 5592 | 0 | 5592 | | |
| 21 | 104/021/900270 | எஸ்.ராஜேந்திரன் | 21 | 2012–2025 | 19339 | 0 | 19339 | | |
| 22 | 104/021/900344 | கல்யாணசுந்தரம் | 21 | 2015–2025 | 2068 | 0 | 2068 | | |
| 23 | 104/021/900352 | வீ.ஆர்.ஆர் பெரியமீனாட்சி | 21 | 2021–2025 | 6756 | 0 | 6756 | | |
| 24 | 104/021/900453 | கே.தெட்ஷிணா மூர்த்தி | 21 | 2018–2019 | 450 | 0 | 450 | | |
| 25 | 104/021/900488 | ஜூபைதாபீவி | 21 | 2020–2021 | 1836 | 0 | 1836 | | |
| 26 | 104/021/900489 | ஜூபைதாபீவி | 21 | 2020–2021 | 1516 | 0 | 1516 | | |
| 27 | 104/021/900490 | ஜூபைதாபீவி | 21 | 2020–2021 | 752 | 0 | 752 | | |
| 28 | 104/021/900491 | ஜூபைதாபீவி | 21 | 2020–2021 | 1026 | 0 | 026 | | |
| 29 | 104/021/900492 | ஜூபைதாபீவி | 21 | 2020–2021 | 1026 | 0 | 1026 | | |
| 30 | 104/021/900493 | ஜூபைதாபீவி | 21 | 2020–2021 | 1026 | 0 | 1026 | | |
| 31 | 104/021900494 | ஜூபைதாபீவி | 21 | 2020–2021 | 1026 | 0 | 1026 | | |
| 32 | 104/021/900497 | சீ.நடராஜன் | 21 | 2020–2021 | 294 | 0 | 294 | | |
| 33 | 104/021/900498 | சீ.நடராஜன் | 21 | 2020–2021 | 588 | 0 | 588 | | |
| 34 | 104/021/900502 | எம்.நூருன்னிசா | 21 | 2022–2023 | 298 | 0 | 298 | | |
| 35 | 104/021/900503 | எம்.நூருன்னிசா | 21 | 2022–2023 | 187 | 0 | 187 | | |
| 36 | 104/021/900504 | எம்.நூருன்னிசா | 21 | 2022–2023 | 187 | 0 | 187 | | |
| 37 | 104/021/900505 | எம்.நூருன்னிசா | 21 | 2022–2023 | 123 | 0 | 123 | | |
| 38 | 104/021/900689 | பீ.கோவிந்தம்மாள் | 21 | 2021–2023 | 1388 | 0 | 1388 | | |
| 39 | 104/021/900691 | பீ.கோவிந்தம்மாள் | 21 | 2021–2025 | 1746 | 0 | 1746 | | |
| 40 | 104/021/900126 | A .இந்திரா | 21 | 2021–2022 | 385 | 0 | 385 | | |
| 41 | 104/021/900127 | A .இந்திரா | 21 | 2021–2022 | 486 | 0 | 486 | | |
| 42 | 104/021/900128 | A .இந்திரா | 21 | 2021–2022 | 486 | 0 | 486 | | |
| 43 | 104/021/900129 | A .இந்திரா | 21 | 2021–2022 | 486 | 0 | 486 | | |
| 44 | 104/021/900130 | A .இந்திரா | 21 | 2021–2022 | 666 | 0 | 666 | | |
| 45 | 104/021/900131 | A .இந்திரா | 21 | 2021–2022 | 666 | 0 | 666 | | |
| 46 | 104/021/900132 | A .இந்திரா | 21 | 2021–2022 | 666 | 0 | 666 | | |
| | 104/021/900133 | A .இந்திரா | 21 | 2021–2022 | 445 | 0 | 445 | | |
| 48 | 104/021/900134 | A .இந்திரா | 21 | 2021–2022 | 445 | 0 | 445 | | |
| 49 | 104/021/900135 | A .இந்திரா | 21 | 2021–2022 | 445 | 0 | 445 | | |
| 50 | 104/021/900792 | செல்வம் | 21 | 2019–2020 | 490 | 0 | 490 | | |
| 51 | 104/021/901135 | டி.ரவிச்சந்திரன் | 21 | 20 –2022 | 122 | 0 | 122 | | |
| 52 | 104/023/900384 | வீ.சுப்ரமணியன் | 23 | 2023 2025 | 870 | 870 | 1740 | | |
| 53 | 104/023/900436 | உ.மாலதி | 23 | 2024–2025 | 0 | 912 | 912 | | |
| 54 | 104/024/900623 | ஜெயா | 24 | 2016– | 1186 | 0 | 1186 | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2017 | | | | | |
| 55 | 104/024/900624 | ஜெயா | 24 | 2016–2017 | 1578 | 0 | 1578 | | |
| 56 | 104/024/900625 | ஜெயா | 2 | 2016–2017 | 1052 | 0 | 1052 | | |
| 57 | 104/024/900174 | சாந்தா | 24 | 2016–2017 | 866 | 0 | 866 | | |
| 58 | 104//024/900175 | சத்தியவதி | 24 | 2016–2017 | 395 | 0 | 395 | | |
| 59 | 104/024/900197 | சீனிவாசன்(ம) 6 நபர்கள் | 24 | 2016–2017 | 1049 | 0 | 1049 | | |
| 60 | 104/024/900199 | பி.பழனியப்பன் | 24 | 2022–2025 | 6516 | 0 | 6516 | | |
| 61 | 104/024/900227 | வி.டி.எ.ஹாஜா ஷேக்அலாவுதீன் | 24 | 2020–2021 | 750 | 0 | 750 | | |
| 62 | 104/024/900395 | வி.டி.எ.ஹாஜா ஷேக்அலாவுதீன் | 24 | 2020–2021 | 750 | 0 | 750 | | |
| 63 | 104/024/900400 | மணி ராமலிங்கம் சுப்பிரமணி | 24 | 2020–2021 | 4888 | 0 | 4888 | | |
| 64 | 104/024/900267 | ஹபீப் ரஹ்மான் | 24 | 201./201 | 210 | 0 | 210 | | |
| 65 | 104/024/900268 | எம்.பிரபாகரன் | 24 | 2020–2021 | 357 | 0 | 357 | | |
| 66 | 104/024/900269 | ஹபீப் ரஹ்மான் | 24 | 2020–2021 | 156 | 0 | 156 | | |
| 67 | 104/024/900270 | ஹபீப் ரஹ்மான் | 24 | 2020–2021 | 156 | 0 | 156 | | |
| 68 | 104/024/900271 | ஹபீப் ரஹ்மான் | 24 | 2020–2021 | 156 | 0 | 156 | | |
| 69 | 104/024/900 2 | ஹபீப் ரஹ்மான் | 24 | 2020–2021 | 156 | 0 | 156 | | |
| 70 | 104/024/900361 | சாம்சன் | 24 | 2021–2022 | 445 | 0 | 445 | | |
| 71 | 104/024/900363 | நா. கார்த்திகேயன் | 24 | 2020–2021 | 2359 | 0 | 2359 | | |
| 72 | 104/024/900364 | நா. கார்த்திகேயன் | 24 | 2020–2021 | 3494 | 0 | 3494 | | |
| 73 | 104/024/900365 | நா. கார்த்திகேயன் | | 2020–2021 | 1855 | 0 | 1855 | | |
| 74 | 104/024/900366 | நா. கார்த்திகேயன் | 24 | 2020–2021 | 1273 | 0 | 1273 | | |
| 75 | 104/024/900367 | நா. கார்த்திகேயன் | 24 | 2020–2021 | 358 | 0 | 358 | | |
| 76 | 104/024/900396 | வி.டி.எ.ஹாஜா ஷேக்அலாவுதீன் | 24 | 2020–2021 | 1375 | 0 | 1375 | | |
| 77 | 104/024/900460 | வி.டி.எ.ஹாஜா ஷேக்அலாவுதீன் | 24 | 2020–2021 | 1375 | 0 | 1375 | | |
| 78 | 104/024/900461 | வி.டி.எ.ஹாஜா ஷேக்அலாவுதீன் | 24 | 2020–2021 | 1375 | 0 | 1375 | | |
| 79 | 104/024/900528 | டிரஸ்ட்டி கபாலீவரர் கோவில் | 24 | 2020–2021 | 150 | 0 | 150 | | |
| 80 | 104/020/900342 | வீ.பாலு | 20 | 2024–2025 | 0 | 26033 | 26033 | | |
| | மொத்தம் | | | | 169306 | 48929 | 18235 | | |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட சொத்துவரியில் ஏற்கனவே புதிய சொத்துவரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுவதால் மேற்படி பட்டியலில் கண்டுள்ள பழைய சொத்துவரிவிதிப்பு தொகையினை நிரந்தரமாக நீக்கம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். /2024/அ1

பொருள் எண் : 31

திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்களில் வியாபாரம் செய்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு 14.03.2024 ல் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்வாறு ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கோரப்பட்டது.

| வ.எண் | ஏலம் விவரம் | ஏலதாரர்பெயர் | ஏலத்தொகை |
|---|---|---|---|
| 1 | திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட | திரு.த.ஜெயபிரகாஷ் த/பெ.தமிழ்ச்செல்வன் 103,நெய்விளக்குதோப்பு திருவாரூர் | ரூ.5,50,000/– |

637) அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| 2 | தெருக்களில் வியாபாரம் செய்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | திரு.க.ஐயப்பன் த/பெ.கருணாநிதி சபாபதி தெரு திருவாரூர் | ரூ.5,40,000/- |

மேற்கண்ட ஏலத்தின் வரிசை எண் 1-ல் கண்டுள்ள திரு.த.ஜெயபிரகாஷ் என்பவர் உயர்ந்தபட்ச ஏலகேள்வியாக ரூ.5,50,000/- கோரப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலககுறிப்பு:

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்படி இனத்திற்கு பொதுஏலம்/ஒப்பந்தபுள்ளி அறிவிப்பின் நிபந்தனைகளுக்குட்பட்டு வரிசை எண் 1-ல் கண்டுள்ள உயர்ந்தபட்ச ஏலத்தொகையை ஏற்று ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் அனுபவித்துக்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

3.பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிமம் உத்தரவு வழங்கிடும் நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மற்றும் அலுவலக நடவடிக்கைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 182/2024/அ5

பொருள் எண் : 32

திருவாரூர் நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 14.03.2024 ல் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்வாறு ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கோரப்பட்டது.

| வ.எண் | ஏலம் விவரம் | ஏலதாரர்பெயர் | ஏலத்தொகை |
|---|---|---|---|
| 1 | நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | திரு.த.ஜெயபிரகாஷ் த/பெ.தமிழ்ச்செல்வன் 103,நெய்விளக்குதோப்பு திருவாரூர் | ரூ.2,50,000/- |
| 2 | | திரு.க.ஐயப்பன் த/பெ.கருணாநிதி சபாபதி தெரு திருவாரூர் | ரூ.2,45,000/- |

மேற்கண்ட ஏலத்தின் வரிசை எண் 1-ல் கண்டுள்ள திரு.த.ஜெயபிரகாஷ் என்பவர் உயர்ந்தபட்ச ஏலகேள்வியாக ரூ.2,50,000/- கோரப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலககுறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி இனத்திற்கு பொதுஏலம்/ஒப்பந்தபுள்ளி அறிவிப்பின் நிபந்தனைகளுக்குட்பட்டு வரிசை எண் 1-ல் கண்டுள்ள உயர்ந்தபட்ச ஏலத்தொகையை ஏற்று ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் அனுபவித்துக்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிமம் உத்தரவு வழங்கிடும் நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மற்றும் அலுவலக நடவடிக்கைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 182/2024/அ5

638) அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் : 33

திருவாரூர் நகராட்சி கோவில்துறையான் சந்தில் மீன் விற்கும் கடைகளில் கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமத்திற்கு 14.03.2024 ல் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்வாறு ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கோரப்பட்டது.

| வ.எண் | ஏலம் விவரம் | ஏலதாரர்பெயர் | ஏலத்தொகை |
|---|---|---|---|
| 1 | கோவில்துறையான் சந்தில் மீன் விற்கும் கடைகளில் கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம். | திரு.க.ஐயப்பன் த/பெ.கருணாநிதி சபாபதி தெரு திருவாரூர் | ரூ.1,60,000/- |
| 2 | | திரு.த.ஜெயபிரகாஷ் த/பெ.தமிழ்ச்செல்வன் 103,நெய்விளக்குதோப்பு திருவாரூர் | ரூ.1,57,000/- |

மேற்கண்ட ஏலத்தின் வரிசை எண் 1-ல் கண்டுள்ள திரு.க.ஐயப்பன் த/பெ.கருணாநிதி சபாபதி தெரு திருவாரூர் அவர்களின் உயர்ந்தபட்ச ஏலகேள்வியாக ரூ.1,60,000/- கோரப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலககுறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி இனத்திற்கு பொதுஏலம்/ஒப்பந்தபுள்ளி அறிவிப்பின் நிபந்தனைகளுக்குட்பட்டு வரிசை எண் 1-ல் கண்டுள்ள உயர்ந்தபட்ச ஏலத்தொகையை ஏற்று ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் அனுபவித்துக்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிமம் உத்தரவு வழங்கிடும் நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மற்றும் அலுவலக நடவடிக்கைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 182/2024/அ5

639) அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் : 34

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 சீராத்தோப்பு பகுதியில் கழிவறை சீரமைக்கும் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 2167/2022/இ1

640) அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது

| | |
|---|---|
| பொருள் எண் : 35<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28 பாரதி தெருவில் பகுதியில் கழிவறை சீரமைக்கும் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண். 2167/2022/இ1 | 641) அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண் : 36<br>திருவாரூர் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-24 ல் அரசாணை நிலை (4D) எண் 39 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC) துறை நாள் 14.09.2023 ன்படி ரூ. 13.28 கோடி மதிப்பீட்டில் பழம் மற்றும் காய்கறி சந்தை தரைத்தளத்தில் 176 கடைகள், முதல் தளத்தில் 48 கடைகள், இரண்டாம் தளத்தில் 7 கடைகள் ஆக மொத்தம் 231 கடைகள் ஜீப்ளி மார்கெட் பகுதியில் கட்டப்பட்டு வருகிறது.<br>ஜீப்ளி மார்கெட் பகுதியில் கட்டப்பட்டு வரும் கடைகளுக்கு திட்ட ஒதுக்கீடு தொகை விடுவிக்க காலதாமதம் ஏற்படின் பணியை முழுமையாக முடிக்க ஒப்பந்தாரருக்கு பட்டியல் தொகை வழங்கி திட்டப்பணியை விரைவாக முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டியுள்ளதால் மேற்படி கடைகள் கட்டும் பணி நடைபெற்று கொண்டு இருக்கும் நிலையில் பொது குத்தகை உரிமம் பொது முன்ஏலம் மற்றும் முன் ஒப்பந்தபுள்ளி கோரிட மன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்,<br>2. ஜீப்ளி மார்கெட் பகுதியில் கட்டப்பட்டு வரும் பழம் மற்றும் காய்கறி சந்தை கடைகளுக்கு குத்தகை உரிமம் பொது முன்ஏலம் மற்றும் முன் ஒப்பந்தபுள்ளிகள் கோரிட மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. மேற்படி கடைகளுக்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலத்தினை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | 642) அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண் : 37<br>திருவாரூர் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-24 ல் அரசாணை நிலை (4D) எண் 39 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC) துறை நாள் 14.09.2023 ன்படி ரூ. 16.30 கோடி மதிப்பீட்டில் திருவாரூர் நகராட்சியின் பழைய பேருந்து நிலையத்தை இடித்து விட்டு புதிதாக பேருந்து நிலையம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவற்றில் தரைத்தளத்தில் பிளாக் I 61 கடைகள், பிளாக் II 11 கடைகள், பிளாக் III 19 கடைகள் பிளாக் IV 2 கடைகள், பிளாக் v (உணவகம்) 1 கடை ஆக மொத்தம் 94 கடைகளும், முதல் தளத்தில் பிளாக் I 58 கடைகள், பிளாக் II 20 கடைகள், பிளாக் III 16 கடைகள், பிளாக் IV 2 கடைகளும் ஆக மொத்தம் 96 கடைகளும் தரைத்தளம் மற்றும் முதல் தளங்களில் மொத்தம் 190 கடைகள் கட்டப்பட்டு வருகிறது.<br>பழைய பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டு வரும் கடைகளுக்கு திட்ட ஒதுக்கீடு தொகை விடுவிக்க காலதாமதம் ஏற்படின் பணியை முழுமையாக முடிக்க ஒப்பந்தாரருக்கு பட்டியல் தொகை வழங்கி திட்டப்பணியை விரைவாக முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டியுள்ளதால் மேற்படி கடைகள் கட்டும் பணி நடைபெற்று கொண்டு இருக்கும் நிலையில் பொது குத்தகை உரிமம் பொது முன்ஏலம் மற்றும் முன் ஒப்பந்தபுள்ளி கோரிட மன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்,<br>2. பழைய பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டு வரும் கடைகளுக்கு குத்தகை உரிமம் பொது முன்ஏலம் மற்றும் முன் ஒப்பந்தபுள்ளிகள் கோரிட மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. மேற்படி கடைகளுக்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலத்தினை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | 643) அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண் : 38<br>திருவாரூர் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-24 ல் அரசாணை நிலை (4D) எண் 39 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC) துறை நாள் 14.09.2023 ன்படி ரூ.5.42 கோடி மதிப்பீட்டில் திருவாரூர் நகராட்சியின் சந்தைபேட்டை பகுயில் புதிதாக மீன் மற்றும் இறைச்சி சந்தை கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவற்றில் தரைத்தளத்தில் 78 கடைகள், முதல் தளம் 14 கடைகள் இரண்டாம் தளம் 14 கடைகள் ஆக மொத்தம் 106 கடைகள் கட்டப்பட்டு வருகிறது.<br>சந்தைபேட்டை பகுதியில் கட்டப்பட்டு வரும் கடைகளுக்கு திட்ட ஒதுக்கீடு தொகை விடுவிக்க காலதாமதம் ஏற்படின் பணியை முழுமையாக முடிக்க ஒப்பந்தாரருக்கு பட்டியல் தொகை வழங்கி திட்டப்பணியை விரைவாக முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டியுள்ளதால் மேற்படி கடைகள் கட்டும் பணி நடைபெற்று கொண்டு இருக்கும் நிலையில் பொது குத்தகை உரிமம் பொது முன்ஏலம் மற்றும் முன் ஒப்பந்தபுள்ளி கோரிட மன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்,<br>2. சந்தைபேட்டை பகுதியில் கட்டப்பட்டு வரும் கடைகளுக்கு குத்தகை உரிமம் பொது முன்ஏலம் மற்றும் முன் ஒப்பந்தபுள்ளிகள் கோரிட மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. மேற்படி கடைகளுக்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 | 644) அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது |

இலத்தினை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண் : 39

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய பங்குத்தொகை ரூ.3,25,000/- செலுத்திடவும் அதற்கான செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

| ஆண்டு | தொகை |
|---|---|
| 2021-22 | ரூ.75000 |
| 2022-23 | - |
| 2023-24 | ரூ.125000 |
| 2024-25 | ரூ.125000 |
| **கூடுதல்** | **ரூ.3,25,000** |

அலுவலகக்குறிப்பு :-

மேற்கண்ட செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.7074/2013/சி1

645) அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் : 40

